# இளநிலைப்பட்டதாரிகள் கோவிட் - 19 காலப்பகுதியில் நூலக வசதிகளைப் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

# The Problems Faced by Undergraduates Using of Library : A Study Based on Covid - 19 Period

Badhusha.H.F, Afrose. F, Paslan.H.M, Nasrin Muhammadu Ibrahim & IsmiyaBegam. M.S
Department of Islamic Studies, South Eastern University Of Sri Lanka
ismiyams@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம் :** நூலகப் பயன்பாடு என்பது ஒரு மாணவனின் கல்வி நிலையை உயர்ச்சி அடையச் செய்வதில் முக்கிய பங்காற்றும் ஒரு காரணி எனலாம். அந்த வகையில் பல்கலைக்கழக இளநிலைப்பட்டதாரிகளின் கல்வி நிலையையும், ஆய்வுத்திறனையும் மேம்படுத்தக் கூடிய ஒரு சாதனமாக நாம் முன்வைக்க கூடிய ஒரு விடயமாக நூல்நிலையம் காணப்படுகின்றது. இவ்வாய்வானது நூலக வசதிகளைப் பயன்படுத்துவதில் இளநிலைப்பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவுசார் மற்றும் பண்புசார் முறையில் அமைந்த இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து தோதுமாதிரி அடிப்படையில் (Conveniance Sampling method) தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்கள் நடப்பாண்டில் (2021) முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் வருடத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடம் கட்டமைக்கப்படாத நேர்கணல் மற்றும் தொலைபேசிக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் குறியீட்டு அடையாளப்படுத்தல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளாக ஊழஎனைந 19 பகுதியில் பிரதேச நூல்நிலையங்களை பயன்படுத்துவத்துவதிலும், இணையம் மூலம் தேவையான நூல்களைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

**Keywords:** இளநிலைப்பட்டதாரிகள், நூலகங்கள், கொவிட்-19, பிரச்சினைகள்,நூலக வசதிகள், நூலகப்பயன்பாடு

## 1. ஆய்வுப் பின்னணி

நூலகங்கள் அறிவுத்திறனையும் ஆராய்ச்சித் திறனையும் வளர்க்கும் ஊடகங்களாகும். நூலகங்களை அறிஞர்களின் உருவாக்கமும் உலகளாவிய கண்டுபடிப்புக்களும் இத்தகைய நூலகங்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கம் பெற்றிருக்கின்றன. நூலகம் என்பது 'கடந்த கால மற்றும் நிகழ்கால கலாசாரப் பதிவு பாதுகாக்கப்பட்டு பராமரிக்கும் இடமாகும் (கலைக்களஞ்சியம்)'. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களின் கற்றில் நடவடிக்கைகள் பெருமபாலும் நூலகங்கள் சாரந்ததாகவே இருக்கும். மாணவர்களின் தரத்தை உயர்த்தும் நோக்கிலேயே பல்கலைக்கழகங்களில் நூலகங்கள் நிறுவப்பட்டு மாணவர்களின் ஆய்வு


ISBN 978-624-5736-14-0

ரீதியான விடயங்கள் மட்டுமன்றி வாசிப்பு மட்டத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டும் நூலகங்கள் தனது பங்களிப்பை உரிய முறையில் வழங்கிக் கொண்டிருக்கிறன. இந்த ஆகவே தான் இளநிலைப்பட்டதாரி மாணவர்கள் தமது கல்வி நிலையை மேம்படுத்தவும், தங்களை ஆளுமை உள்ளவர்களாக உயர்த்திக் காட்டவும் நூலகங்கள் பெரிதும் உதவி புரிகின்றன. இத்தகைய நூலகங்ளைப்பயன்படுத்துவதில் கோவிட்- 19 காலப்பகுதியில் மாணவர்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்த அடிப்படையில் இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன'' (தயாளன், 2017) என்ற மேல்நாட்டு அறிஞர் விக்டர் ஹியூகோவின் கருத்துப்படி நோக்குமிடத்து நூலகம் என்பது அமைதியை, ஆறுதலை, அறிவை சுமந்த படி நிலைத்து நிற்கும் ஒரு களஞ்சியம் என்றே கூற வேண்டும். வாசிப்பும், வாசிப்பின் ஊடாக உருவாகும், சீரிய சிந்தனையும் ஒரு மனிதனை அவனது பொதுவான நிலையில் இருந்து சிறப்பானதொரு மேம்பாட்டிற்கு அழைத்துச் செல்கின்றன. வாழ்நாளில் ஒவ்வொரு மனிதனும் ஒருமுறையாவது நூலகத்திற்கு சென்றிருக்க வேண்டும், குறைந்தது ஒரு புத்தகத்தையேனும் வாசித்து அதனுடைய பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டும். ''நல்ல கருத்துக்களை, ஆக்கபூர்வமான கருத்துக்களை, பகுத்தறிவுக் கருத்துக்களை எமது அடுத்த தலைமுறையினருக்கு சிறந்த சிந்தனையை வழங்கக் கூடிய கருத்துக்களை உடைய சமுதாயத்தில் சமத்துவ சிந்தனையை ஊட்டிக் கூடிய விதத்தில் புத்தகங்களுடன் கூடிய ஒரு நூலகம் உருவாக்கப்பட வேண்டும் என பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகின்றார்'' (தயாளன், 2017). பொதுவாக கல்வி கற்கும் மாணவர்களுக்கு புத்தகங்களின் அறிவு மிகவும் மிகவும் அவசியமாகிறது. மாணவர்களுக்கும் நூலகத்திற்கும் இடையிலான முக்கியத்துவம் வாய்ந்த மாற்ற முடியாத உறவு காணப்படுகின்றது. புத்தகங்களின் அறிவைப் பெற்றுக் கொள்வதாயின் அதற்கு நூலகம் அவசியமாகிறது. இன்னும் பாடசாலை மாணவர்கள் நூலகத்தை நாடுவதை விட பல்கலைக்கழக அல்லது உயர்கல்வியை தொடரும் இளநிலை பட்டதாரி மாணவர்கள் நூலகத்தை நாடுவதன் விகிதமானது அதிகமாகும். ஏனெனில் பாடசாலை மாணவர்களுக்கு அறிவுரைப்பு வழிகாட்டி நூல்கள், மற்றும் பாடப்புத்தகங்கள் வாயிலாக தேவையான அறிவுச் சிந்தனைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரும் இளநிலை பட்டதாரிகள் தமக்கு வேண்டிய அறிவினை தேடல் கற்றல் நடவடிக்கைகள் ஊடாக பெற்றுக் கொள்ளத் தலைப்பட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமக்குத் தேவையான அறிவைத் தாமே தேடி அடைந்து கொள்ள வேண்டும். அதனைத் தேடிப் பயணிக்க வேண்டும். அவ்வாறு பயணிக்கத் கூடியதும், பயணிக்கவென்று நாடுவதற்கும் என்று காணப்படும் ஒரே ஒரு அறிவுச் சுரங்கம் நூலகம் ஆகும். உலகின் சகல விதமான அறிவுகளையும் எழுத்து வடிவில் பல ஏடுகளாக சில பக்கங்களுக்குள் செதுக்கப்பட்டு தலைசிறந்து வாழக் கூடிய ஒரு இல்லமாக நூலகங்களே காணப்படுகின்றன. இதனால் தான் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் இளநிலைப் பட்டதாரிகளின் அறிவின் தேடலை பூரணமாக அடைந்து கொள்ளும் பொருட்டு தத்தமது நூலகங்களை புதுப்பித்து, மேம்படுத்தி, புத்தகங்கள்

அபிவிருத்தி செய்கின்றன. இதனிடையே நூலகத்தின் பயனை நாட முன் வாசிப்பின் பயனை மனிதன் உணர வேண்டும். நவீன தொழிநுட்பத்திற்கு ஏற்ப கல்வி முறை மாற்றமடைந்தாலும் நூலகங்களின் பாவனை மாணவர்களுக்கு முக்கிய பகுதியாகும் (டீாயபஎயரொயடை.ர்.இ ஊாழரனாசை. 2017).

''வாசிப்பு ஒரு மனிதனை பூரணமனிதனாக்குகிறது''. ஒரு புத்தகத்தை வாசித்து அதன் மூலம் பூரண பயனைப் பெற்று தனது அறிவை மேம்படுத்த தெரியாத ஒரு மனிதன் : ஒரு புத்தகத்தை முறையாக வாசிக்கக் கூடிய அறிவினைப் பெறாதவன் என்றே கூறப்படக் கூடியவன். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் வாசிப்பு எப்படி அவசியமாகிறது அது போன்று தான் ஒவ்வொரு மாணவனுக்கும், அல்லது மாணவர்களுக்கும் வாசிப்பு என்பது அவசியமாகிறது. இதனால் தான் கல்வி கற்கும் மாணவர்களிடையே வாசிப்புப் திறனை மேம்படுத்திக் கொள்ளுமாறு வழிகாட்டப்படுகிறது. ''நல்ல புத்தகங்களைத் தேடி படிக்காத ஒருவன், படிக்கவே தெரியாத ஒருவனை விட உயர்ந்தவன் அல்ல'' எனும் நேருவின் கருத்து வாசிப்பின் அவசியத்தை உணர்த்துகிறது. இன்றைய சமீபகால நிலையினை நோக்கும் பொழுது உலகினையே மடக்கிக் கிடக்கும் கொவிட் 19 தொற்றானது பல்கலைக்கழக இளநிலைப்பட்டதாரிகளின் கல்வி நடவடிக்கைகளையும் முடக்கி விட்டது என்று கூறுவதே பொருத்தமானது. நிலவி வரும் இச்சூழ்நிலையினால் பல்கலைக்கழகங்கள் கால வரையறையின்றி மூடப்பட்டுவிட்டன. ஊரடங்கு, சமூக இடைவெளி என நாட்டு நிலையை முடக்கி விட்டதனால் பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

## 2. ஆய்வுப்பிரச்சினை

Covide 19 காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை தொடரும் இளநிலைப் பட்டதாரி மாணவர்களுக்கு இணையம் வழியாக தொலை நிலைக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டு கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் பல நன்மைகள் காணப்படினும் இளநிலைப் பட்டதாரிகளின் கற்றல் நடவடிக்கைகளில் பல சிக்கலான நிலைகளும் உருவாகியுள்ளன. இன்றைய நவீன காலச் சூழ்நிலையில் பல தொழிநுட்ப வசதிகள் காணப்பட்ட பொழுதிலும் கூட மாணவர்கள் அவற்றின் ஊடாக தனது அடைவுகளை அடைவதற்கு பல சிக்கலான நிலைகள் காணப்படுகின்றன. இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் இளநிலைப் பட்டதாரி மாணவர்கள் நூல்நிலையங்களை நாடவும் முடியாது. நூல்களை நேரடியாக வாசிக்கவும் இயலாது. இப் பின்னனியை அடிப்படையாக வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

## 3. ஆய்வின் நோக்கம்

நூலக வசதியின்மையால் இளநிலைப்பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் காணல்

## 4. ஆய்வு முறையியல்

அளவுசார் மற்றும் பண்புசார் முறையில் அமைந்த இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை தென்கிழக்குப்

பல்கலைக்கழகத்திலிருந்து தோதுமாதிரி அடிப்படையில் (ஊழுஎநெயைெஉந ளுயஅிடபைெ அநவாழன) தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்கள் நடப்பாண்டில் (2021) முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் வருடத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடம் கட்டமைக்கப்படாத நேர்கணால் மற்றும் தொலைபேசிக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வரும் அட்டவணையில் அவதானிக்க முடியும்.

| No | Universities | Research Smples |
|---|---|---|
| **1** | 1 ஆம் வருடம் | 10 |
| **2** | 2 ஆம் வருடம் | 10 |
| **3** | 3 ஆம் வருடம் | 10 |
| | **மொத்தம்** | **30** |

## 5. இலக்கிய மீளாய்வு

நூலகத்துடன் தொடர்பான ஆய்வுகள் உலகலாவிய ரீதியிலும், எமது இலங்கை நாட்டிலும் பல்வேறுபட்ட அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு கருத்தாகும். ஆனால் தற்கால உலக நடத்தையுடன் ஒப்பிட்டு கொவிட் 19 தொற்றினால் பல்கலைக்கழக மாணவர்கள் நூலகத்தினை பயன்படுத்தல் தொடர்பில் காணப்படும் பாதகங்கள் அல்லது இடையூறுகள் தொடர்பிலான ஆய்வுகள் மிகவும் குறைவான அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நூலகங்களின் பயன்பாடுகள் தொடர்பில் ஒரு சில ஆய்வுகளில் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. அவையாவன,

Bhagvanhai.H., Choudhri. Ph.D (2017) என்பவர்களால் செய்யப்பட்ட “The role of Library in Higher Education" எனும் ஆய்வுக் கட்டுரையில் முதல் நிலை, இரண்டாம் நிலைக் கல்வியுடன் நூலகத்தின் பங்களிப்பை ஒப்பிடுகையில் பல்கலைக்கழக கல்விக்கு நூலகம் முக்கிய தேவையாக கருதப்படுகிறது. அத்தோடு ஒருநூலகத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்குகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, நவீன தொழிநுட்பத்திற்கு ஏற்ப கல்வி முறை மாற்றமடைந்தாலும் நூலகங்களின் பாவனை மாணவர்களுக்கு முக்கிய பகுதியாகும் என்பது பற்றியும் இவ்வாய்வின் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் அவர்களது குறிக்கோள்களாகவும், அடைவுகளாகவும் காணப்படுவது யாதெனின் நவீன தொழிநுட்பத்திற்கு ஏற்றாற் போல் நூலகம் மாற்றப்பட்டிருப்பதானது தொழிநுட்ப உலகில் தொலைவில் இருக்கும் மாணவர்களுக்கும் உயர் கல்வியைத் தொடர இணையத்தள வசதிகளின் ஊடாக பங்களிப்பை வழங்க முனைகிறது என்பதாகும்.

Charles Arthur., Paul Osei Brafi., Alfred Kuranchie (2013) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட “The Use Of Academic Libraries Among Students In Tertiary Institutions in the Sunyani

municipality, Ghana" என்ற ஆய்வுக் கட்டுரையில் மூன்றாம் நிலைக் கல்வியை கற்கும் பொருட்டு மாணவர்களின் நூலகப் பாவனையானது எவ்வாறு அமைந்துள்ளது, என்பது பற்றியும் பரீட்சைகளின் போதும், ஏனைய கணிப்பீட்டு செயற்பாடுகளின் போதும் உரிய நூல்களைப் பயன்படுத்துவது பற்றிய விடயமும் இன்னும் ஆய்வு மற்றும் கல்வியியலில் வெற்றிகரமான நிலையை அடைந்து கொள்ள நூலகம் முக்கியமான விடயமாக காணப்படுகிறது என்பது பற்றியும், நூலகங்களின் தொழிற்பாடுகளை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் அடைந்து கொண்ட குறிக்கோள்களாக மாணவர்கள் அடிக்கடி நூலகத்தினை நாடி தனது தேவைகளை நிறைவு செய்து கொள்கிறார்களா? நூலகத்தினை பயன்படுத்துவதற்கு கைக் கொள்ளும் முறைகள் என்ன என்பதனை அடையாளம் காணல் மற்றும் மாணவர்கள் நூலகத்தில் புத்தகங்கள் இருக்கும் இடங்களை எப்படி இலகுவாக அறிகிறார்கள், தனது அடைவுகளை அடைகிறார்கள் என்பதனை கண்டறிந்து அவைகளை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனையே இவ்வாய்வின் குறிக்கோள்களாக காணப்படுகின்றன.

Lan Yang (2011). "Orientation and function of Library In Quality Education Of College" எனும் ஆய்வுக் கட்டுரையில் நூலகங்களின் தனித்துவம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலகங்கள் மாணவர்களை அவர்களின் தரத்திலும் அறிவிலும் பட்டை தீட்டும் ஒரு சாதணமாக தொழிற்படுவதோடு ஆய்வு ரீதியான விடயங்கள், வினைத்திறனான முறையில் தொழிநுட்பம் சார் அம்சங்களை எவ்வாறு கற்றுக் கொள்வது என்பது பற்றியும், நூலகங்களின் முக்கிய நோக்காக மக்களை மையப்படுத்தியதாக தரமான கல்வியை வழங்கும் நோக்கில் எவ்வாறு அபிவிருத்தியடைந்த மனித சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வில் குறிக்கோள்களாக நோக்குமிடத்து ஒரு கல்லூரியை மேம்படுத்துவதும், உயர்த்தி வைப்பதும், உறுதிப்படுத்துவது நூலகமே ஆகும். எனவே ஒரு கல்லூரியில் தரமான கல்வியை வழங்குவதில் நூலகத்தில் ஆற்றப்படக் கூடிய அபரிதமான பங்களிப்புகளை அறிந்து கொண்டமையாகும். Carvalho e Rodrigues.Maya.Dr., Bala Mandrekar (2020) மேற்கொள்ளப்பட்ட "Impact Of Academic Library Services On Students Success And Performance" எனும் ஆய்வுக் கட்டுரையில் நூலகம் என்பது உண்மையானது, நிச்சயத்தன்னமை வாய்ந்ததுமான விடயங்களை வழங்குவதில் மாணவர்களின் கல்வியின் வெற்றிக்கும், உயர்ச்சிக்கும் எத்தகைய பங்களிப்பை வழங்குகிறது என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது. மேலும் நூலகங்களின் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் எவ்வாறான பயன்களை பெற்றுக் கொள்கிறார்கள் என்பது பற்றியும் மேலும் மாணவர்களுக்கும், நூலகத்திற்கும் இடையிலான முக்கியத்துவம் வாய்ந்த மாற்ற முடியாத உறவு காணப்படுவது பற்றியும், நூலகத்தின் பிரதான பயன்பாடுகள் பற்றியும் அதன் மூலம் அடைய் கூடிய நன்மைகள், கல்வி நிலையை உயர்ச்சிப் படுத்த நூலகங்கள் பெரிதும் பெரிதும் பங்களிப்பு செய்கின்றன என்பது பற்றியும் முழுமையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் குறிக்கோளினை நோக்கம் போது மாணவர்களின் கல்வி நிலைக்கு எவ்வாறு நூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும், கல்வி நடவடிக்கைகள் மற்றும் நூலகப் பயன்பாடு, கல்வி ரீதியான அடைவுகளுக்கும் இடையிலான

உறவு பற்றியும், அங்கீகரிக்கப்பட வழிகளில் நூலக வளங்களை அபிவிருத்தி செய்வது பற்றியும், நூலகங்கள் மற்றும் சேவைகளை பயனாளர்கள் பெற்றுக் கொள்வதில் உள்ள உறுதிநிலை பற்றியதுமான சில குறிக்கோள்களை கொண்டமைந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பெறப்பட்ட அம்சங்களை நோக்கம் போது பொதுவாக நூலகப் பாவனையாளர் ஒருவர் நூலக வளங்கள் மற்றும் சேவைகளை பயன்படுத்தும் போது ஆரம்பமாக அது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொழுது சிறந்த பெறுபேற்றை அடைய முடியும் என்பது இவ்வாய்வின் முடிவாக பெறப்பட்டது.

Nina Shrestha (2008). “A Study On Students Of Library Resources and efficacy” எனும் ஆய்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களுடைய அறிவுநிலையில் நூலகங்களின் வளங்கள் மற்றும் சேவைகள் எவ்வாறு இருப்பினைக் கொண்டுள்ளது என்பது பற்றியும், அவர்களது அது பற்றிய முழுமையாக தெரிந்து கொண்டிருக்கிறார்களா? என்பது பற்றியும் தனிநலனை அபிவிருத்தி செய்வதில் நூலகத்தின் பங்களிப்பு பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

Muhammad Rafiq, University of the Punjab, Syeda Hina Batool, University of the Punjab, Amna Farzard Ali, University of the Punjab, Midrar Ullah, National University of Sciences and Technology (உ0உ0)ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட "University Libraries response to Covid19 Pandemic : A developing Country Perspective எனும் ஆய்வுக் கட்டுரையில் முக்கிய நோக்காக Covid**கசூ** காலத்தில் பல்கலைக்கழக நூலகங்களின் வேலை செய்யும் திறன்கள், சேவை வழங்கும் வழிமுறைகள், திடடங்களை எவ்வாறு நடைமுறைபடுத்துவது என்பது பற்றியதாக அமைந்தது. மேலும் **எ** பல்கலைக்கழக நூலகங்கள் ஆய்வுக்குட்ப்படுத்தப்பட்டதோடு, அதன் தரவுகளும் தரமான நிச்சயிக்கப் பட்டதாக அமைந்தது. அதிக பல்கலைக்கழகங்கள் தொற்று நோய் பரவல் காரணமாக மூடப்பட்டிருந்ததையடுத்து பயனர்கள் நூலகங்களின் வலைத்தளப் பக்கங்கள், மாற்றியமைக்கப்பட்ட வளங்கள், இணைய வழி வழங்குனர் சேவைகளை பயன்படுத்தியதோடு நூலக ஊழியர்கள் வீட்டிலிருந்து தங்களது வேலைகளை மேற்கொண்டதால் பல்வேறு தொழிநுட்ப ரீதியான சவால்களை எதிர்கொண்டனர். அத்தோடு நூலகங்களின் இணைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவது பற்றியது ஆய்வின் முடிவாக பெறப்பட்டது.


Jelena Ciric> Alexsandar Ciric (உ0உ0)ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட The Impact of the Covid**கசூ** Pandemic on Digital Library Usage: A Public Library Case Study எனும் ஆய்வுக் கட்டுரையில் ஊழஎனை **கசூ** தொற்று காரணமாக உலகமே மூடப்பட்டிருந்த வேளையில் பொதுநூலகங்களும் மூடப்பட்டே இருந்த நிலையில் டிஜிட்டல் முறைமையே பயன்படுத்தப்பட்டு வந்தது. இதன் பாவனையானது அதிகரித்தமையால் இதனை

மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதோடு, மேலும் இவ் டிஜிட்டல் அணுகலுக்கு புதிய இயக்க முறைமைகள் மற்றும் புதிய சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும் முன்னைய ஆண்டுகளை விட சமூக ஊடகங்களோடு அதிக ஈடுபாடு கொண்டிருந்ததோடு, மேலும் தொற்று நோய் பரவலால் டிஜிட்டல் நூலகத்தை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிமுறையாக சமூக ஊடகங்களின் தாக்கம் காணப்பட்டது என்பதானது ஆய்வின் முடிவாக பெறப்பட்டது.

Ruth Connell, Valparasion University Lisa Wallis, Worth Eastern Illionois University, David Comeaux, Lousinia state University of Baton Rouge (2021) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட "The Impact of Covid 19 on the Use Academic Library Resources" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் Covid19 தாக்கத்தால் உலகெங்கும் மூடப்பட்டிருந்த நிலையில் நூலகங்களில் உள்ள நூல்களை பயன்படுத்த முடியாமல் போனதால் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு பதிலாக மின் புத்தகங்களே பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வனது ஜப்பானிலுள்ள நூலகங்களில் மின்புத்தகங்கள் கூடுதலாக பயன்படுத்தமை பற்றி கண்டறிவதற்காக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. மேலும் குறித்த இரு ஆண்டுகளுக்குள் மின் புத்தகங்களின் பயன்பாடு அதிகரிக்கப் பட்டதால், அதன் பயன்பாடு பற்றி விரிவாக ஆராயப் பட்டதோடு, இன்னும் அதிக துறை சார் மின் புத்தகங்களுக்கு புதிய தேவைகள் ஏற்பட்டதானது இவ்வாய்வின் முடிவாக அமைந்தது. இவ்வாறு நூலகங்களின் முக்கியத்துவம் தொடர்பான பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், Covide 19 காலப்பகுதியில் நூல்நிலைய வசதியின்மையால் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக ஆய்வுகள் மிக அரிதாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, அவ்வாய்வு இடைவெளியை நிவர்த்தி செய்யும் முகமாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6. ஆய்வுக்கட்டமைப்பு

**ஆய்வுக்கட்டமைப்பு வரைபுத்திட்டம்**





ISBN 978-624-5736-14-0

## 7. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

இப்பகுதியானது நூல்நிலையங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள், இணையம் மூலம் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்கள், தரவிரக்கம் செய்ய முடியாத போது பெற்றுக் கொள்ளும் வழி முறைகள் ஆகிய பகுதிகளின் கீழ் பகுப்பாய்வ செய்யப்பட்ட அம்சங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

### 7.1 நூல்நிலையங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள்

நூல்நிலையங்களுக்கு செல்வதில் சிரமம், நூலகத்தில் புத்தகங்களை இரவலாகப் பெறுவதில் சிரமம், துறைகள் சார் நூல்களின் தட்டுப்பாடு, நூல்நிலைய அலுவலர்களில் உள்ள பலவீனம் போன்ற சவால்கள் தொடர்பான பெறுபேறுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

#### 7.1.1 நூல்நிலையங்களுக்கு செல்வதில் சிரமம்

தற்போதைய நாட்டு சூழ்நிலைகளுக்கு அமைய நூலகங்களை நாடி புத்தகங்களைப் பெறுவதில் பல இடையூறுகள் காணப்படுகின்றன. காரணம் கொவிட்-19 தொற்றின் பரவல் நிலைமையானது அவ்வாறான நிலையை உருவாக்கியிருக்கிறது. விரும்பிய நேரத்தில் எல்லாம் நூலகத்திற்கு செல்ல முடியாமையால் நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றன என அனைவரும் ஒருமித்த பிரச்சினையாக அடையாளப்படுத்தயுள்ளனர். பல்வேறுபட்ட சட்டதிட்டங்களை முறையாகப் பேண வேண்டிய நிலைமை கருதியும், சமகாலப்பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு நாட்டின் நிலை கருதி அரசாங்கத்திற்கு முழுமையாகக் கட்டுப்படவேண்டிய நிலையும் இருப்பதால் முறையாக நூல்நிலையத்தைப் பயன்படுத்த முடியவில்லை என்றும் நூல் நிலையத்திற்குச் செல்ல முடியுமாக இருந்தாலும் நூல்நிலையம் மூடியிருக்கின்றமையினால் முறையாகப் பயன்படுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். கொவிட் -19 தொற்றின் பரவல் நிலை மிகவும் தீவிரமாக இருப்பதால் வெளியில் சென்றால் நோய் பரவும் என்ற அச்சம் அதிகமாக நிலவுகிறது. மேலும் 16 மாணவர்கள் அவ்வாறு நூல்நிலையத்திற்குச் செல்லக் கூடிய நிலை இடைக்கிடை ஏற்பட்டாலும், நோய் தொற்றி விடும் என்ற அச்ச நிலை காரணமாக நூல் நிலையத்திற்குச் செல்ல முடியவில்லை என்று கூறுகின்றனர். அதாவது நோய்த் தொற்றினால் அதிகரித்து வரும் மரண நிகழ்வுகள், வைத்தியசாலையில் இடம்போதாமை, தனிமைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான சிகிச்சைகள் ஆகியவற்றை நோக்கும் போது நூல்நிலையத்தினைப் பயன்படுத்துவதற்கென வெளியே செலவதற்கு மிகவும் அச்சமாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். இன்னும் நாடு தொடர்ந்தும் அடிக்கடி முடக்க நிலைக்கு உட்படுத்தப்படுகின்றமையால் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றும் இடங்களை தவிர ஏனைய இடங்களும் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. அதனை அடிப்படையாக வைத்து நூலகங்களை திறக்கும் நேரங்கள் அரிதாகியது எனும் 10% மாணவர்களும் தங்களது கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.


ISBN 978-624-5736-14-0

### 7.1.2 நூலகத்தில் புத்தகங்களை இரவலாகப் பெறுவதில் சிரமம்.

எல்லா வகைப் புத்தங்களையும், எல்லா மொழியிலான புத்தகங்களையும் பெற்றுக் கொள்ள முடியாமையாக உள்ளது என 21% மாணவர்கள் கூறுகின்றனர். அதாவது சில நூல்நிலையங்கள் அதிகமாக பொதுவாக எமது பல்கலைக்கழக நூலகங்களாக இருக்கட்டும் அல்லது எமது பிரதேச நூலகங்களாக இருக்கட்டும் நாம் எதிர்நோக்கும் பிரதான சவாலாக காணப்படுவது புத்தகங்களை இரவலாகப் பெறுவது தொடர்பான பிரச்சினை ஆகும். இச் சவாலினை அடிப்படையாக வைத்து சில புத்தகங்கள் குறைவாக காணப்படுகின்றமையை முன்வைத்து நேர்காணலில் ஈடுபடுத்திய போது 30 மாணவர்களில் 25 மாணவர்கள் இக்கருத்தினை ஆதரிக்கின்றனர். அப்படியாயின் அதிகபட்சமானோர் இதனை சவாலாக எதிர்கொண்டு இருக்கின்றனர். அடுத்து குறிப்பிட்ட தொகைக்கு மேல் புத்தகங்களை இரவலாகப் பெற முடியாமை என்ற முக்கியமான சவாலிற்கு 28 மாணவர்கள் தங்களது ஆதரவான கருத்துக்களை வழங்கி இருந்தனர். ஏனெனில் அனேகமாக அரச பல்கலைக்கழக நூலகத்திலும் கூட இரண்டு அல்லது மூன்று புத்தகங்களுக்கு மேல் இரவலாகப் பெற முடியாது என்ற நடைமுறை காணப்படுகிறது. அடுத்து மற்றுமொரு பாரிய சவாலாக எதிர்கொள்ளப்படும் விடயம் தான் புத்தகங்களை வைத்துக் கொள்வதில் கால அவகாசம் குறைவாகக் காணப்படுகின்றமையால் தேவையான காலப்பகுதிக்கு ஏற்றாற்போல் நூல்களைத் தம் வசம் வைத்துக் கொள்ள முடியவில்லை என 26 மாணவர்கள் கூறுகின்றனர். சில புத்தகங்களை இரவலாகப் பெறும் காலம் ஒரு நாளாகக் கூட காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலைகள் சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. அடுத்து இளநிலைப் பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரதான சவாலாக சில மொழி சார் புத்தகங்கள் அரிதாக இருக்கின்றமை எனும் சவால் எம்மால் இனங்காணப்பட்டது. இச் சூழ்நிலையை எதிர்கொண்ட 22 மாணவர்கள் இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதாக எமக்குக் கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். இதுவே சில சமயங்களில் மெய்யான நிலையாகவும் காணப்படுகிறது. அடுத்து சரியான நேரத்தில் புத்தகங்களை ஒப்படைக்க முடியாமையால் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை இருப்பதாகக் கூறுகின்றனர். அதாவது, புத்தங்களைத் தம் வசம் வைத்துக் கொள்ள வேண்டிய காலத்திற்கும் அதிகமாக எமது தேவை இருப்பதால் புத்தகங்களைத் தம் வசம் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதன் காரணமாக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை இருப்பதாக 20 பேர் கூறுகின்றனர்.

### 7.1.3 துறைகள் சார் நூல்களின் தட்டுப்பாடு.

அநேகமாக பல்கலைக்கழக மாணவர்கள் எதிநோக்கக் கூடிய பாரிய ஒரு சவாலாக இது காணப்படுகிறது. ஒரே நேரத்தில் பலர் சில புத்தகங்கள் மீது தேவையுடையவர்களாக காணப்படுகின்றமையால் பொதுவாக ஒரு சில நூல்கள் அரிதாகவே காணப்படுகின்றன என 25 மாணவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இன்னும் கிடைக்கப்பெறும் புத்தகங்களைக் கொண்டு தேவையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதாக 21 மாணவர்களும் கூறியுள்ளனர். அத்தோடு உரிய புத்தகங்கள் கிடைக்காத போது புத்தகம் எழுதியவர்களை நேரடியாகச் சந்தித்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்டு வருவதாக 9 மாணவர்கள் கூறுகின்றனர். 22 மாணவர்கள் அவ்வாறான சில நூல்களை

கல்வி சம்மந்தமான whatsapp குழுமங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறுகின்றனர்.

7.1.4 **நூல்நிலைய அலுவலர்களில் உள்ள பலவீனம்.**

நூல்நிலைய அலுவலர்களில் உள்ள பலவீனம் காரணமாகவும் பல சவால்களை எதிர்கொள்ள நேர்கின்றது என 19 மாணவர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் நாம் கேட்கும் நூல்கள் அவர்களுக்கு தெரியாமையால் நாமே தேடிஎடுக்க வேண்டிய நிலை இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். அறிமுகமில்லாத நூலகர்களினால் தேவையான நூல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போவதாகவும், அலுவர்களின் அசட்டைப் போக்கு. (நான் கேட்கும் நூல் பற்றிய அறிவு இல்லாமல் அது இருக்கும் இடமும் தெரியமையால் அந்த நூல் இல்லை என்று சொல்லுதல்இ நேர விரயம் போன்ற சவால்களையும் முன்வைத்துள்ளனர்.

**7.2 இணையம் மூலம் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதில் எதிர் கொள்ளும் சவால்கள்**

இணையம் மூலம் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் சவால்கள் என்ற ரீதியில் பல்வேறு சவால்களை நேர்காணலின் போது இனங்கண்டோம். அந்த வகையில் தரவிரக்கம் செய்வதில் சிரமம்இ சுகாதார ரீதியான பிரச்சினைகள்இ வாசிப்புக்கலையில் பின்தங்கிய நிலைஇ இணைய புத்தகங்களை விளங்கிக் கொள்வதில் கடினம் ஆகியவை பிரதான சவால்களாகும்.

**7.2.1 தரவிறக்கம் செய்வதில் சிரமம்**

இணையம் மூலம் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வாய்ப்புண்டு. இணையத்தில் உள்ள சிக்கல்கள் காணப்படுவதாக 25 பேர் உடன்படும் அதேவேளை 10 பேர் பண வீண் விரயம் எனக் குறிப்பிடுவதோடு சில புத்தகங்களைத் தரவிரக்கம் செய்ய முடியாது என 19 மாணவர்களும் கருதுகின்றனர். கைபேசியில் சேமிப்பகம் (Storage) போதாமையால் இலகுவில் தரவிரக்கம் செய்ய முடியாதுள்ளது என 25 மாணவர்களும், சில நூட்கள; photo பிரதிகள் Pdf ஆக்கப்பட்டுள்ளமையினால் வாசிப்பதில் கடினம் என்று 15 மாணவர்களும் தெரிவித்தனர்.

**7.2.2 சுகாதார ரீதியான பிரச்சினைகள்**

இணைய வழிமூலமாக புத்தகங்களை வாசிப்பதால் வாசகர்களான எமக்கு பல்வேறு சுகாதார ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்தவகையில் தொடர்ந்து இணையவழி மூலமாக புத்தகங்களை தரவிறக்கம் செய்து வசிப்பதால் கண் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதாக அனைவரும் கருதுகின்றனர். மேலும், தலைவலி ஏற்படுவதாக 27 பேரும் , உடம்பில் பல மாற்றங்கள், சோர்வு நிலை, உடம்பில் வலிகள் ஏற்படுவதாக 25 பேரும் தெரிவித்தனர்.

### 7.2.3 வாசிப்புக்கலையில் பின்தங்கிய நிலை

இணைய வழிமூலமாக புத்தகங்களை வாசிப்பதால் எதிர்நோக்கும் சவால்களுள் வாசிப்புக்கலையில் பின்தங்கிய நிலை காணப்படுவதும் மிகப் பிரதானமான பிரச்சினையாகும். அதாவது நேரடியாக புத்தகங்களை கையில் எடுத்து வாசிக்கும் போது உள்ள சந்தோசமும் விளக்கமும் தெளிவும் இணையப் புத்தகங்களில் இல்லை என 25 மாணவர்களும் , இப்போது இருக்கின்ற காலத்திற்கு தகுந்தாற்போல் எம் வாசிப்பும் தொழினுட்ப முன்னேற்ற அடைவதில் எவ்வித தவறும் கிடையாது என 27 மாணவர்களும், கவனச் சிதறல்கள் உண்டு என 20 மாணவர்களும், சோர்வை ஏற்படுத்தும் என 14 மாணவர்களும், உணர்வுபூர்வமான வாசிப்பு கிடையாது என 23 மாணவர்களும் குறிப்பிட்டனர்.

### 7.2.4 இணைய புத்தகங்களை விளங்கிக் கொள்வதில் கடினம்

இணைய புத்தகங்களை வாசிக்கும் போது அதனை விளங்கிக் கொள்வது சவாலான விடயமாகும். அந்த வகையில் இணைய புத்தகங்களை வாசிப்பது நேரடியாக புத்தகங்களை வாசிப்பது போல அமையாது. எனவேதான் நூலகம் போன்று அமைதியாக சூழல் வீட்டில் இல்லாததனால் குறித்த விடயங்த்தில் தெளிவு பெறுவது மிகக் கடினமாக உள்ளது என 25 பேரும் வீட்டில் வாசிப்பதற்கான சுதந்திரம் குறைவு என்று 7 பேரும், இணைய வழி புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வம் குறைவு என்று 18 பேரும், குறிப்புக்கள் இலகுவில் எடுத்துக் கொள்ள முடியாமை என்று 34 பேரும், வேற்று மொழி நூட்களை விளங்கிக் கொள்ள முடியாமை என்று 31 பேரும் கருத்துத் தெரிவித்தனர்.

## 7.3 தரவிரக்கம் செய்ய முடியாத போது பெற்றுக் கொள்ளும் வழி முறைகள்

இணையத்தின் மூலம் சிலவேளைகளில் புத்தகங்களைத் தரவிறக்கம் செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். அவ்வாறான சூழ்நிலையில் சில வழிமுறைகளைப் பின்பற்றுவதினூடாக நூல்களைப் பெற முடியும் என நேர்காணளினூடாக இனங்காணப்பட்டது. அந்த வகையில் இணையத்தினூடாக தரவிறக்கம் செய்ய முடியாது போகும் போது வேறு நபர்கள் அல்லது நூலகங்கள் மூலம் பெற்றுக் கொள்வதாக 15 மாணவர்களும், நூலக அலுவலர்களுடன் கலந்துரையாடி பெற்றுக் கொள்வதாக 21 மாணவர்களும், நண்பர்களின் ஒத்துழைப்பின் மூலம் பெற்றுக் கொள்வதாக 16 மாணவர்களும், வாசிப்பில் ஈடுபாடு உள்ள நண்பர்கள் மூலம் பெற்றுக் கொள்வதாக 19 மாணவர்களும், தேவையான விடயத்தை மாத்திரம் புகைப்படமாக்கிக் கொள்வதாக 27 மாணவர்களும், ஆசிரியர்கள் மூலம் பெற்றுக் கொள்வதாக 16 மாணவர்களும், முடெனைந மூலமாக அல்லது தபால் மூலமாக புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்வதாக 6 மாணவர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

## 8. ஆய்வின் முடிவுகள்

**Covide- 19** காலப்பகுதியில் மாணவர்கள் நூல்நிலையங்களிலிருந்து நூட்களைப் பெற்றுக்கொள்வதில் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். தத்தமது ஊர்களில் உள்ள நூலகங்களின் மூலம் தமக்குத் தேவையான வசதிகளைப் பெற முடியாமையாகவுள்ளது என்பது பெரும்பாலான மாணவர்களது கருத்தாகக் காணப்படுகின்றது. அத்தோடு இணைய

வழி மூலமாகப் புத்தகங்களைத் தரவிரக்கம் செய்வதிலும் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அதிலும் குறிப்பாக சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு அதிகமாக மாணவர்கள் முகங்கொடுத்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தரவிரக்கம் செய்வதிலும் பல சவால்கள் காணப்பட்டுள்ளதாக பெறுபேறுகளிலிருந்து தெளிவாகின்றது.

**9. பரிந்துரைகள்**

- ஒவ்வொரு மாவட்டங்களிலும், அம்மாவட்டங்களில் காணப்படக்கூடிய கிராமங்கள் உட்பட அனைத்து நூல்நிலையங்களும் மீள்சீர்திருத்தத்திற்குக் கொண்டு வரப்படல் வேண்டும்.
- அனைத்து மொழியிலான மக்களுக்கும் பயனுள்ள வகையில் அந்நூல்நிலையங்கள் வடியமைக்கப்படல் வேண்டும்.
- பொருத்தமான அனுபவம் நிறைந்த நூலக அதிகாரிகள் கொண்டு நூல்நிலையங்கள் இயங்கப்படல் வேண்டும்.
- மாணவர்கள் இணைய வழி மூலம் கற்கைகளைத் தொடர்வதற்கும், தரவிரக்கம் செய்வதற்குமான இணைய வசதிகள் அனைத்தையும் முறையாக செய்து கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.
- அனைத்துப் புத்தகங்களையும் தரவிரக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- மாணவர்களுக்கென சில விலையுயர்ந்த புத்தகங்களை பகுதி கழிவில் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


Carvalho e Rodrigues.Maya.Dr., Bala Mandrekar (2020). *Impact Of Academic Library Services On Students Success And Performance.* Retrieved from : https://digitalcommons.unl.edu/libphilprac/4246/

Charles Arthur., Paul Osei Brafi., Alfred Kuranchie (2013). *The Use Of Academic Libraries Among Students In Tertiary Institutions in the Sunyani municipality, Ghana.* Retrieved from : https://www.iiste.org/Journals/index.php/JEP/article/view/4076

Lan Yang (2011). *Orientation and function of Library In Quality Education Of College.* Retrieved from: https://www.researchgate.net/publication/271320070_Orientation_and_Function_of_Library_in_Quaility_Education_of_College

Nina Shrestha (2008). *A Study On Students Use of Library Resources and self-efficacy*. Retrieved from : https://www.semanticscholar.org/paper/A-Study-on-Students-Use-of-Library-Resources-and-Shrestha/f118151c2ce0fc275764c76e58e6d83fd547935c

Mahwasane.N.P (2016). *Conceptualizing the Importance of Libraries in Student Academic Performance: A Brief Review*. Retrieved from : https://www.researchgate.net/publication/321208074_Conceptualizing_the_Importance_of_Libraries_in_Student_Academic_Performance_A_Brief_Review

GeorgeD Kuh., Robet M.Gonyea (2003). *The Role of the Academic Library in Promoting Student Engagement in Learning*. Retrieved from: https://www.researchgate.net/publication/228460597_The_Role_of_the_Academic_Library_in_Promoting_Student_Engagement_in_Learning

தயாளன். பி (2017). *நூலக சிந்தனைகள்…!*. Retrieved from: https://keetru.com